செ.வெ.எண்: 733 நாள்: 11.11.2020

**தஞ்சாவூர் மாவட்ட கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் 4 இலட்சத்து 68 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் மாவட்ட கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் இன்று(11.11.2020) வழங்கினார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக கொண்டு,கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கம் தமிழக அரசால் அமைக்கப்பட்ட செயல்படுத்தப்பட்டு வருகிறது.இக்குழுவில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் துணைத் தலைவராகவும்,அமைப்பாளர் மற்றும் பொருளாளராக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறை அலுவலர்களும் ஆறு நபர்களை கொண்டு சங்கம் இயங்கி வருகிறது.இச் சங்கத்திற்கு விதைத்தொகையாக ரூபாய் ஒரு லட்சம் தமிழக அரசு அளித்துள்ளது நன்கொடையாளர்கள் அளிக்கும் தொகை மற்றும் அரசு இணைய மானியமாக இரண்டு மடங்கு வழங்கும் தொகை கொண்டு வறுமையில் வாழும் ஏழை-எளிய கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த மகளிர்களுக்கு அவர்கள் வாழ்வு மேம்பட நலத்திட்ட உதவிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக இன்று 26 கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த மகளிருக்கு ரூபாய் 4 இலட்சத்து 68 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, இச்சங்கத்திற்கு அதிக அளவில் நன்கொடை வழங்கி உதவிடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள கேட்டுக்கொண்டார்

இந் நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் திரு.சங்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.